**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 74/மா/2023**

**நாள் :15.07.2023**

திரு. R. மணிகண்டன்,
கரூர். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
கரூர் மாநகராட்சி, கரூர். – எதிர்மனுதாரர்

கரூர், தாந்தோன்றிமலை, பாரதிதாசன் நகர், நான்காவது தெரு, கதவு எண்.69I/7E4, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.R. மணிகண்டன் என்பவரின் 22.03.2023 நாளிட்ட மனு, 27.03.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 74/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கரூர், தாந்தோன்றிமலை, பாரதிதாசன் நகர், நான்காவது தெரு, கதவு எண்.69I/7E4, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.R.மணிகண்டன் என்பவர் தனது 22.03.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"சபரிநாதன் என்ற நபர், 44வது வார்டில், பொன்நகரில் உள்ள தனது அப்பாவிற்கு (M.மாணிக்கம்–இறந்து விட்டார்) (வரி விதிப்பு எண்.082/044/901105) சொந்தமான Plot No.33. 1.200 சதுர அடி அளவுள்ள தனது இடத்தில் 15 ஆண்டுகளுக்கு முன்பு, மாநகராட்சியிடம் Vacant Land Property Tax செலுத்தாமல், மாநகராட்சியிடம் எவ்வித முறையான கட்டிட Building Plan Approval மற்றும் வரைபட Layout Approval ஆகிய அனுமதி பெறாமல், சுமார் 22 x 20 அளவுள்ள கட்டிடத்தை கட்டியுள்ளார். இதன் மூலம் தனக்கு தெரிந்தே முறைகேடு செய்து கட்டிடத்தை கட்டியுள்ளார்.

மேலே குறிப்பிட்ட, பொன்நகரில் உள்ள மனை எண்.Plot No.33, 1200 சதுர அடி அளவு உள்ளது. இதில் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடம் 750 Square Feet அளவுள்ள கட்டிடம் மட்டுமே மாநகராட்சியால் அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளது. சுமார் 15

ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடம் 440 Sq.ft. தனக்கு தெரிந்தே முறைகேடுசெய்து கட்டிடத்தை கட்டியுள்ளார்.

மாநகராட்சியிடம் எவ்வித முறையான கட்டிட (Building Plan Approval) மற்றும் வரைபட (Layout Approval) ஆகிய அனுமதி பெறாமல், 22 x 20 = 440 square feet அளவுள்ள கட்டிடத்தை கட்டியதோடு மட்டுமல்லாமல் மாநகராட்சிக்கு இதன் மூலம் வருவாய் இழப்பு ஏற்படுத்தியிருக்கிறார்.

எவ்வித முறையான கட்டிட Building Plan Approval மற்றும் வரைபட Layout approval ஆகிய அனுமதி பெறாமல் கட்டப்பட்ட சுமார் 22 x 20 =440 square feet அளவுள்ள கட்டிடத்திற்கு சீல் வைத்து உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். மேலும் 15 ஆண்டுகளாக எந்தவித நடவடிக்கையும் எடுக்காத உரிய அதிகாரிகளின் மீது Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules–ன் படி, ஒழுங்கு நடவடிக்கையும் மற்றும் இதர சட்டங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கும்படியும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். உரிய ஆதாரங்களை இதனுடன் இணைத்துள்ளேன்" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, இம்முறைமன்ற நடுவத்தின் 06.04.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் கரூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

3) கரூர் மாநகராட்சி ஆணையர் தனது 02.05.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

மனுதாரரின் புகாரினை தொடர்ந்து, 20.04.2023 நாளிட்ட அறிவிப்பு திரு.சபரிநாதன் அவர்களுக்கு வழங்கப்பட்டு அன்னாரிடமிருந்து 25.04.2023 அன்று பதில் பெறப்பட்டது. "மனுதாரர் திரு.மணிகண்டன் புகாரில் தெரிவித்தவாறு மனை எண்.33ல் உள்ள கட்டிடத்திற்கு சொத்து வரிவிதிப்பு எண்.082/044/901105ல் அரையாண்டிற்கு வரி தொகை ரூ.3023/– என்றும், கதவு எண்.4, தாந்தோன்றி கிராமம் சர்வே எண்.561/1ல் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு ம.வ./ந.ஊ.இ.எண்.355/89 என்றும், மனை எண்.33ல் கட்டப்பட்டுள்ள கட்டிடம் 20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தார்சு கட்டிடம் மற்றும் ஏ.சி. சீட் அட்டையுள்ள கட்டிடம் என்றும் திரு.சபரிநாதனின் தந்தை காலத்தில் கட்டியது மிக பழமையான கட்டிடத்திற்கு அனுமதி பெறப்பட்ட விபரங்கள் எதிர்மனுதாரரால் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் தற்போது புதிய கட்டுமானம் ஏதும் கட்டப்படவில்லை என்று தெரிவித்துள்ளார். மேலும் மேற்கண்ட கட்டிடத்திற்கு வரிவிதிப்புகள் சரியாக செய்யப்பட்டுள்ளது என்றும் மனுதாரர் அதே இடத்தில் குடியிருந்து வருபவர் எனவும் ஆனால் மாநகராட்சிக்கு இத்தனை வருடங்களில் எவ்வித புகாரும் மனுதாரர்அளிக்கவில்லை என்றும் தற்போது மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் நிலவும் பகையால் இப்புகாரை அளித்துள்ளார் என்றும் புகார் தரப்பட்டதுமே மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் இருதரப்பினர்களுக்குள் கரூர் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் வழக்கு எண்.OS.No.86/2023, என்ற சிவில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு நிலுவையிலுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மாநகராட்சியின் விளக்கத்தினை ஏற்று முறைமன்ற நடுவம் முறையீட்டு மனு எண்.74/C/2023 ல் மனுவில் உள்ள புகாரை தள்ளுபடி செய்து உரிய நீதி வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 15.06.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 26.05.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் 15.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

"கரூர் மாவட்டம், கரூர் மாநகராட்சி வார்டு எண்.44, பொன்நகரில், திரு.சபரிநாதன் என்பவருக்கு சொந்தமான மனை எண்.33ல் 1200 சதுர அடி கொண்ட இடத்தில் மாநகராட்சி அனுமதி எதுவும் பெறாமல் 15 ஆண்டுகளுக்கு முன்னர் 440 சதுர அடி அளவில் கட்டடம் கட்டியுள்ளார். மாநகராட்சியின் ஒப்புதல் இல்லாமல் கட்டப்பட்டுள்ள மேற்கண்ட கட்டடம் குறித்து மாநகராட்சியில் புகார் மனு அளித்தும், தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல் கோரப்பட்டும் எவ்வித பதிலும் என்னால் பெறப்படவில்லை.

எனவே, மேற்கண்ட கட்டட அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ள மேற்கண்ட கட்டடத்தின் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும், அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ள கட்டடத்தின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காத மாநகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மாநகராட்சியின் மீதான எனது குற்றச்சாட்டுக்கள் குறித்து என்னால் சமர்ப்பிக்கப்படும் 15.06.2023 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) மேலும் மனுதாரர் தனது 15.6.2023 நாளிட்ட அறிக்கையில், மற்றவற்றிற்கிடையில், தான் இம்முறைமன்ற நடுவத்திற்கு 22.3.2023 நாளிட்ட மனு அளித்த பிறகு சொத்து வரி உயாததி விதிக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டடம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கவும் 15 ஆண்டுகளாக நடவடிக்கை ஏதும் எடுக்காத அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் கோரியுள்ளார்.

7) கரூர் மாநகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளர் 15.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :

" மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள கரூர் மாநகராட்சி வார்டு எண்.44 பொன்நகர் மனை எண்.33ல் உள்ள 600 சதுர அடி கொண்ட கட்டடத்தை அனுமதியில்லாமல் கட்டியுள்ளதாகவும், அக்கட்டிடத்திற்கு மாநகராட்சியால் வரி விதிப்பு ஏதும் செய்யப்படவில்லை எனவும் குறிப்பிட்டு மேற்கண்ட கட்டடத்தின் மீது நடவடிக்கை எடுத்திட புகார் மனு அளித்திருந்தார். மனுதாரர் குறிப்பிட்டுள்ள மனை எண்.33ல் உள்ள கட்டடத்திற்கு சொத்து வரிவிதிப்பு எண். 082/044/1105 அரையாண்டிற்கு ரூ.3023/– சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளது என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மேற்கண்ட கட்டடம் புதிதாக கட்டப்படாமல், 15ஆண்டுகளுக்கு முன்பு ஒப்புதல் பெறாமல் கட்டப்பட்டதால், மேற்கண்ட பழைய கட்டடத்தின் மீது மாநகராட்சியால் விதிகளின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறைமன்றத்தில் கரூர் மாநகராட்சி ஆணையரால் 02.05.2023 அன்று அனுப்பப்பட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

8) இந்நேர்வில் மனுதாரரின் மனு, வாக்குமூலம், கரூர் மாநகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம், கரூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. அதில் பின்வரும் விவரங்கள் அறியப்படுகின்றன.

மனுதாரர், கரூர், 44–வது வார்டு, பொன்நகரில் மனை எண்.33ல் கரூர் மாநகராட்சியிடம் எவ்வித அனுமதியும் பெறாமல் 22 x 20 (440 Sq.ft) என்ற அளவுள்ள கட்டடம் கட்டப்பட்டுள்ளது என்றும் அதற்கான சொத்துவரியை செலுத்தவில்லை என தெரிவித்து, அனுமதியில்லாத கட்டடத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள கரூர், பொன்நகர் 44–வது வார்டு மனை எண்.33ல், 20 ஆண்டுகளுக்கு முன்பு தார்சு கட்டடம் மற்றும் A.C. சீட் அட்டையுள்ள கட்டடம் கட்டப்பட்டுள்ளது என்றும் அதற்கான கட்டிட அனுமதி பெறப்பட்ட விவரங்கள் தரப்படவில்லை என்பதும், அக்கட்டிடத்திற்கு சொத்துவரி அரையாண்டிற்கு ரூ.3,023/– விதிக்கப்பட்டுள்ளதும், கரூர் மாநகராட்சியின் ஆணையரின் அறிக்கை மற்றும் கரூர் மாநகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளர் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறியமுடிகிறது.

மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ள 15.06.2023 நாளிட்ட மனுவில், இம்முறைமன்ற நடுவத்தில் கடந்த 22.03.2023 அன்று முறையீடு செய்த பிறகே வரிவிதிப்பு எண்.082/044/901105–ல் வரி விதிக்கப்பட்டுள்ளது எனவும் இதன் மூலம் மாநகராட்சி அலுவலர்கள் முறைகேடு செய்துள்ளது தெரியவருகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

பொன்நகர், வார்டு 44–ல் உள்ள மனை எண்.33–ல் உள்ள கட்டடத்திற்கு தாந்தோனி நகராட்சியானது கரூர் நகராட்சியுடன் இணைக்கப்பெற்ற 24.10.2011க்கு முன்பே சொத்து வரி விதிப்பு செய்யப்பட்டு தற்போது வரை வசூல் செய்யப்பட்டு வருகிறது என மாநகராட்சி தெரிவித்துள்ளபோதிலும் முறையாக ஆவணங்களை சமர்ப்பிக்கவில்லை. மேலும் மாநகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் தனது வாக்குமூலத்தில் மேற்கண்ட கட்டடம் புதிதாக கட்டப்படாமல் 15 ஆண்டுகளுக்கு முன்பு ஒப்புதல் பெறாமல் கட்டப்பட்டதால் மாநகராட்சியின் விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என தெரிவித்துள்ளது மாநகராட்சி களப்பணியாளர்களின் மெத்தனப்போக்கை வெளிச்சம் போட்டு காட்டுகிறது. அவர்கள் உரிய முறையில் களப்பணி ஆற்றவில்லை என்பதும் தெளிவாகிறது.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–

Section-7:- The Ombudsman shall perform all or any of the following functions, namely:-

7 (c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும்,

இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

கரூர் மாநகராட்சியில் **பொன்நகர், வார்டு 44, மனை எண்.33ல்** அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடத்திற்கு மாநகராட்சி விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாததால் அதற்கு காரணமாக இருந்துள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும், கரூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சொத்து வரி விதிக்காத கட்டடங்களை களப்பணியாளர்களைக்கொண்டு கண்டறிந்து, அவ்வாறான கட்டடங்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கரூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

The Corporation cannot take shelter under the excuse that the building was constructed 15 years back without taking any action against violations in the building execution as per the Town and Country Planning Act provisions. Disciplinary action should be initiated against the Corporation field official delinquents who were slack and indifferent in safeguarding the revenue of the Corporation.

The Commissioner's attempt to evade the issue by attributing a civil case by the petitioner and some other is dismissed as diversionary in order to run away from his sworn responsibility. The subject matter in the court is entirely different. The Commissioner's lame excuse is condemned by this Forum. The DMA is directed to pull up the Commissioner and instruct him to proceed further in the light of the Town and Country Planning Act procedure. An action taken report may be sent to this office in the next 45 days.

**2023–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 15–ஆம் நாள்** என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. R. மணிகண்டன்,
கதவுஎண்.69I/7E4,
நான்காவது தெரு,
பாரதிதாசன் நகர்,
தாந்தோன்றிமலை,
கரூர்.

2. ஆணையர்,
   கரூர் மாநகராட்சி,
   கரூர்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்
   நகர் நிர்வாக அலுவலக வளாகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.

4. இணைஇயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்(முகூபொ)